பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 12 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ரஷ்யா ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் இன்று புதுதில்லி வருகிறார்.

2. மொபைல் ஃபோன் உற்பத்தியாளர்கள் Sanchar Saathi செயலியை நிறுவுவது கட்டாயமல்ல என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. வாக்காளர்கள் அனைவரும் தங்களது நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை கடைசி தேதி வரை காத்திருக்காமல் விரைந்து சமர்ப்பிக்குமாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கிருஷ்ணகிரி, தருமபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ரஷ்யா ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் இன்று புதுதில்லி வருகிறார்.

இரண்டு நாள் பயணம் மேற்கொள்ளும் அவர் நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசவுள்ளார்.

அப்போது பிராந்திய மற்றும் சர்வதேச பரஸ்பர நலன் சார்ந்த விவகாரம் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் மற்றும் ஊடகம் தொடர்பான துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் திரு. விளாடிமிர் புதின் சந்தித்துப் பேசவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மொபைல் ஃபோன் உற்பத்தியாளர்கள் Sanchar Saathi செயலியை முன்கூட்டியே நிறுவுவது கட்டாயமல்ல என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தொலைதொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த செயலி பாதுகாப்பானது என்றும், மக்களுக்கு இணைய பாதுகாப்பை அளிக்கும் என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையே இச்செயலி மூலம் உளவு பார்க்க முடியும் என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா நிராகரித்துள்ளார்.

மக்களவையில் இதுகுறித்த கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், பயனாளர்கள் தாங்கள் விரும்பும்போது இச்செயலியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும், பின்னர் அதை நீக்கிவிடலாம் என்றும் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<>>>>

வாக்காளர்கள் அனைவரும் தங்களது நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை கடைசி தேதி வரை காத்திருக்காமல் விரைந்து சமர்ப்பிக்குமாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் முழுமையான மற்றும் பிழையற்ற வாக்காளர் பட்டியல் தயாரிப்பை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கணக்கீட்டுப் படிவங்களைப் பெற்ற வாக்காளர்கள் உடனடியாக நிரப்பப்பட்ட படிவங்களை வழங்குமாறு உத்திரமேரூர் சட்டப்பேரவைத் தொகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர் திரு. விஜயகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

உண்மையான செய்திகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையில் ஊடகவியலாளர்கள் பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. வி. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

நாகர்கோவிலில் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கில் பங்கேற்றுப் பேசிய அவர், புகைப்படக் கருவியை வைத்துள்ள எவரும் செய்தியாளராக முடியும் என்றும், ஆனால் அறநெறி நிலைகளுடன் பணியாற்றுவோரே உண்மையான செய்தியாளராக உருவாக முடியும் என்று குறிப்பிட்டார்.

இதழியல் துறையில் தெளிவு, துல்லியம் மற்றும் துணிச்சல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகள் குறித்தும் திரு. பழனிச்சாமி எடுத்துரைத்தார்.

<<<<>>>>

வாரணாசியில் நடைபெற்று வரும் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக கோயம்புத்தூரில் இருந்து காசிக்கு 64 பேர் புறப்பட்டுச் சென்றனர்.

ரயில் மூலம் நேற்று மாலை 6 மணிக்கு புறப்பட்ட அவர்கள் நாளை இரவு மணி 9.30க்கு பனாரஸ் சென்றடைய உள்ளனர்.

இந்த பயணத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே சேலத்தில் இருந்து நேற்றிரவு 53 பேர் கொண்ட குழுவினர் காசிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

சேலம், ஈரோடு, தருமபுரி, நாமக்கல், திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் இன்று கிருஷ்ணகிரி, தருமபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

லட்சத்தீவு மற்றும் கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மழை காரணமாக சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிப்பதற்காக 40 பேர் கொண்ட ஐரோப்பிய யூனியன் குழு இன்று புதுதில்லி வருகிறது.

<<<<>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியாவின் சார்பில் தற்காலிக Bailey இரும்புப் பாலமும், 500 நீர்சுத்திகரிப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள ஓமன் வெளியுறவு அமைச்சர் திரு. பதர் அல்-புசைதி, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலம் பிஜப்பூரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 12 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் புழல் மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் மழைநீரை வெளியேற்றும் பணிகளை ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் திரு. நாசர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே மர்ம நபர்கள் சுற்றித் திரிவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் உதவியோடு இளைஞர்கள் இரவு நேரத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திரு. சதீஷ் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருத்தணியில் மின்சாதனங்களை பழுதுநீக்கும் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமடைந்தன.

<<<<>>>>

சென்னையில் மழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த 4 நாட்களில் 20 லட்சத்து 79 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளதாக சென்னை பெருநகர மாநகராட்சி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஜோஷ்னா சின்னப்பா, 6-11, 11-7, 5-11, 11-6, 11-7 என்ற செட் கணக்கில் எகிப்தின் Nardine Garas-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தன்வி கன்னா, 7-11, 12-10, 14-12, 7-11, 11-4 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் Nga Ching Cheng-ஐ வென்றார்.

<<<<>>>>

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ராய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 358 ரன் எடுத்தது.

359 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 49 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 362 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக Aiden Markram 110 ரன் எடுத்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தயானந்த் ஷிமோகா, ஆர்யமான் டாண்டன் ஆகியோரும், மகளிர் ஒற்றையர் பிரிவில் இஷா ராணி, பரூவா, அனுபமா உபாத்யாயா, ஷ்ரேயா லீலே, தஸ்னிம் மிர் ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இன்று திரிபுரா அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை மணி 4.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>